1974 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ). தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

*திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரையில் 12-வது பத்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப்போல் நமது மாநிலம் உணவுத் துறையில் ஒரு உபரி மாநிலமானால் நம் மாநிலத்தில் உள்ள சில பகுதிகளில் அரிசி ஏன் ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். ஆகவே விநியோக முறையில் உள்ள பெரியதொரு கோளாறுதான் அதற்குக் காரணமாக இருக்கவேண்டும். அண்டை மாநிலங்களுக்கு அரிசி அனுப்புவதற்கு அரசு முன்வந்திருக்கும் போது நம் மாநிலத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும், பார்டர் ஏரியாக்களுக்கும், அரிசி நியாயமான விலையில் கிடைக்கச் செய்வது அரசின் முதல் கடமையாகும். அரசின் தவறான உணவுக் கொள்கையினால்தான் இந்த விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

எங்களது அண்டை மாவட்டமான நெல்லை மாவட்டத்தில் அரிசி 1.50 ரூபாய்க்கு விற்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி ரூ. 5-க்கு விற்கக்கூடிய ஒரு நிலை இன்று இருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கக்கூடிய தடுப்புச் சாவடிகள், மாவட்டத்திற்குள் இருக்கும் தடுப்புச் சாவடிகள் இவைகள் எல்லாம் மாற்றப்பட்டு மாநிலத்தின் எல்லைகளில் மட்டும் தடுப்புச் சாவடிகள் வைக்கவேண்டும். ஆகவே பார்டர் ஏரியாக்களிலும் அரிசி நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, படிக்காதவர்களிடத்திலே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குரிய திட்டங்கள் எதுவும் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்படவில்லை. வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்கள் எதுவும் கவர்னர் அவர்கள் உரையில் காணப்படவில்லை. தொழில் துறையில் உற்பத்தியின் அளவு குறைந்து போயிருக்கிறது. புதிதாக தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதாக இல்லை. மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து, வேலைவாய்ப்பு குறித்து மிகவும் பீதியடைந்திருக்கிறார்கள். இளைஞர் அணியில் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்குமா என்ற